விமர்சனம்

# நண்பன்

விரும்பும் படிப்பைத் தேர்வு செய்து படிக்க மாணவனுக்கு சுதந்திரம் வேண்டும், பெற்றோரோ மற்றவர்களோ தங்கள் எண்ணங்களைத் திணிக்கக் கூடாது என்பதுதான் 'நண்பன்' நமக்குச் சொல்லவரும் மேலான கருத்து. இதைத் தலையைச் சுற்றி வந்து மூக்கைத் தொட்டது போலச் சொல்லியிருக்கிறார்கள். ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு காலேஜ்ஜாம், அந்தக் காலேஜிலே அவ்வளவு எளிதாக இடம் கிடைக்காதாம் என்ற அளவில் ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரியில் டீனாக இருக்கும் சத்யராஜின் மகனுக்கே கூட இடம் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட பொறியியல் கல்லூரியில் ஜீவாவும் ஸ்ரீகாந்த்தும் படிக்கிறார்கள். அந்தக் கல்லூரியில் வந்து சேர்கிறார் விஜய். மூவரும் ஒரே அறையில் தங்க நண்பர்கள் ஆகிறார்கள்.



ஜீவா தன்னம்பிக்கையற்ற, மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து படிக்க வந்திருப்பவர். ஊரில் உள்ள அனைத்து சாமிகளையும் தன் அறையில் மாட்டி வைத்து 'சாமி பாஸாகணும்... சாமி பாஸாகணும்..' என்று தினமும் கற்பூரத்தட்டை ஏந்துகிறார்.

ஸ்ரீகாந்த்துக்கு பெரிய புகைப்படக் கலைஞராக வரவேண்டும் என்பது கனவு. ஆனால் தன் அப்பாவின் ஆசைக்காகத் தன் கனவை ஒதுக்கிவிட்டு பொறியியல் படிக்கிறார். இந்நிலையில் இவர்களுடன் இணையும் விஜய் நண்பர்களின் விருப்பங்களைப் புரிந்து கொண்டு அவர்கள் விரும்பியதைச் செய்யச் சொல்கிறார். அதற்காக பல வழிகளில் நண்பர்களை நல்வழிப்படுத்துகிறார். இடையில் இலியானாவைக் காதலிக்கும் சேவையையும் பார்க்கிறார்.




ஒரு கட்டத்தில் நண்பர்கள் ஜீவாவும், ஸ்ரீகாந்த்தும் வாழ்க்கையில் விரும்பிய படியே முன்னேறி நிற்க, விஜய் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. இவர்களுடன் படித்து அமெரிக்காவில் கோடிகளில் சம்பளம் வாங்கும் சத்யன் மூலமாக விஜய் இருக்குமிடம் நண்பர்களுக்குத் தெரிய வர, அங்கு சென்றால் அங்கு விஜய்க்கு பதில் வேறொருவர் இருக்கிறார். இறுதியில் நண்பர்கள் விஜய்யை கண்டுபிடித்தார்களா? என்ன ஆனது என்பது மீதிக் கதை.

கதை முழுக்க பேக் டிராப்ல ஸ்ரீகாந்த் கதை சொல்வது போல படம் நகர்கிறது. இந்தப் படத்துக்கு இது தேவையில்லாத விஷயமாக இருக்கிறது. ஏனென்றால், விஜய் - இலியானா சந்திப்புகளில் அவர்கள் இருவரும்தான் இருக்கிறார்கள். அவர்களைத் தவிர வேறு யாருமே இல்லாத போது, அதையெல்லாம் ஸ்ரீகாந்த் விவரிப்பது சரியாக இல்லையே!

படத்தில் வரும் ராகிங் காட்சிகள் பற்றிச் சொல்லியாக வேண்டும். ஆண்கள், பெண்கள் படிக்கும் கல்லூரி, கட்டுக்கோப்பும், கண்டிப்பும் இருக்கும் கல்லூரி, ஊரிலேயே பெரிய கல்லூரி இதில் ராகிங் இருப்பதே அபத்தம். ஆனால் இங்கு மேல் சட்டை, பேண்ட் எல்லாம் அவிழ்த்துவிட்டு வெறும் ஜட்டியுடன் சீனியர்களுக்கு வணக்கம் வைப்பது முகம் சுளிக்க வைக்கிறது.

தாரை தப்பட்டை முழக்கம், பூமழை பொழிவு என்பதெல்லாம் விஜய் அறிமுகமாகும் காட்சிக